தமிழ் நாடு சட்டப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1971 ஜுலை 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

வணிகப் பாடங்களுக்கானத் தேர்வுகள்

*465 வினா—திரு. நா. வீராசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தட்டெழுத்து, சுருக்கெழுத்து போன்ற வணிகப் பாடங்களுக்கான அரசுத் தேர்வு மே மாதம் 15-ம் தேதியே முடிந்ததும், விடைத் தாள்கள் தேர்வாளர்களுக்கு 14—6—1971 வரை அனுப்பப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(உ) அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சுமார் 40,000 நபர்கள் வணிகப் பாடங்களுக்கான தேர்வுகள் எழுதினர். அவர்களது விடைத்தாள்களை மத்திய அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு அதன் பின்னர், விடைத்தாள் திருத்துபவர்களுக்கு 3—6—1971 முதல் பகுதிப் பகுதியாக அனுப்பப்பட்டு 16—6—1971-ல் கடைசிப்பகுதி அனுப்பப்பட்டது. மற்றும், பள்ளியிறுதி தேர்வு முடிவுகள் வெளியிடும் அலுவலில் அலுவலக ஊழியர் அனைவரும் ஈடுபட்டிருந்த காரணத்தால், 3—6—1971 முதல்தான் விடைத்தாள்கள் திருத்துபவர்களுக்கு பகுதிகளாக அனுப்ப முடிந்தன.

(உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்த வணிகப் பாடங்களுக்கான தேர்வுகள் ஆண்டுக்கு இரு முறை நடப்பது வழக்கம். இப்படிக் காலம் கடந்து விடைத் தாள்களை அனுப்பிய காரணத்தால் முடிவுகள் வருவதற்குக் கால தாமதம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இந்த மாதத்திலே அடுத்த தேர்வுக்குப் பணம் கட்ட வேண்டும். ஆனால், இதுவரையில் 'ரிஸல்ட்' வரவில்லை. எனவே, இப்படிப்பட்ட 'டிலே' அந்த இலாக்காவில் உண்டாகிக் கொண்டிருக்கிறது.

இதை உணர்ந்து நம்முடைய அரசாங்கம் வேறொரு இலாக்காவிற்கு இதை மாற்றுவதற்கான திட்டங்களை இப்பொழுது ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது என்று அறிகிறேன். வேறொரு துறைக்கு இதை மாற்றுவதற்குப் பதிலாக, தனியாகவே ஒரு இயக்குநரை நியமிக்குமா? ஆண்டுக்கு 80,000 பேர் எழுதக் கூடிய ஒரு தேர்வுக்கு தனி இயக்குநரை நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட காலத்தாழ்வு மூலமாக ஏற்படுகிற சங்கடங்கள் அறியப்படுகின்றன. கால தாமதம் ஏற்படாத வகையில் திருத்த என்ன ஏற்பாடுகளைச் செய்யலாமோ அந்த ஏற்பாடுகளைச் செய்யலாம். அதற்கு என்ன மாற்றுத் திட்டங்கள் என்று கண்டறிந்து தாமதத்தைத் தவிர்ப்பதற்கான முயற்சி எடுக்கப்படும்.

S.I.E.T College for Women at Madras

* 466 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether it is a fact that the gas cylinder in the S.I.E.T. College, Madras burst about the 13th February 1971 causing injuries to a number of students?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1971-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13-ஆம் நாளன்று, கல்லூரி நீச்சல் குளத்தின் அருகே திறந்த வெளியில் வைக்கப்பட்டிருந்த, பெரும்பாலும் காலியாயிருந்த குளோரின் வாயு உருளையி லிருந்து வாயு சிறிது கசிந்து வெளியேறியது. எனவே, வாயு உருளை எதுவும் வெடிக்கவில்லை. இதற்கு அருகில் இருந்த சுமார் 100 மாணவிகள் இவ் வாயுவை உள்ளிழுத்ததன் காரணமாக, அவர்களுக்கு மூச்சுத் திணறியது. அவர்கள் மருத்துவ மனையில் சிகிச்சை யளிக்கப்பட்ட பின்னர் அனுப்பப்பட்டனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 467, 468, 469 ஆகிய எண்கள் உள்ள வினாக்கள் சேர்ந்தாற்போல் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

*467 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை S.I.E.T. பெண்கள் கல்லூரிக்கு அரசு அளித்து வரும் ஆசிரியர் மானியத் தொகை கடந்த மூன்று ஆண்டுகளாகத் தரப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். (இ) S.I.E.T. கல்லூரி 1969-70-ம் ஆண்டிற்கு அப்பொழுது இருந்து வந்த ஒரு மாணவிக்கு ஒரு பகுதிக்கு ரூ. 70 என்ற புகுமுக வகுப்புக்கான கட்டண ஈட்டை, விவாதத்திற்குப் பிறகு ஒப்புக் கொண்டது. இக் கல்லூரிக்கு ரூ. 1.81 லட்சம் கட்டண ஈடாகவும் வழங்கப்பட்டது. இக்கல்லூரி எற்கெனவே ஒரு